# 24 ஈழத்துச் சைவ ஆலயங்கள்

## 1. பறாளை விநாயகர் ஆலயம்



### i. அறிமுகம்

இலங்கையில் விநாயகர் ஆலயங்கள் இல்லாத ஊரே இல்லை எனலாம். விநாயகர் பெரிய ஆலயங்களில் மட்டுமின்றி, ஆற்றங்கரை, குளக்கரை, மருத மரத்தடி, அரச மரத்தடி போன்ற இடங்களிலும் வீற்றிருந்து மக்களுக்கு அருள்புரிகின்றார்.

விநாயகப் பெருமானின் புராதன ஆலயங்கள் பலவற்றின் அழிபாடுகள் வன்னிப் பகுதிகளிலும், புராதன அநுராதபுரப் பகுதிகளிலும் பொலனறுவை, தெய்வந்துறை முதலான இடங்களிலும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. மேற்கூறியவற்றின் அடிப்படையில் நோக்கும்பொழுது, இலங்கை முழுவதிலும் விநாயகர் வழிபாடு நிலவி இருந்திருக்கலாம் என்ற முடிவுக்கு நாம் வரலாம்.

### ii. அமைவிடம்

இன்றும் புராதன பழமையோடும் சிறப்போடும் விளங்கும் ஆலயங்கள் பலவற்றை இலங்கையின் வடக்கு, கிழக்கு, மத்தி, மேற்கு முதலான பகுதிகளில் காணமுடியும். அவ்வகையில் இலங்கையிலுள்ள புராதன விநாயகர் ஆலயங்களில் ஒன்றான சுழிபுரம் பறாளை விநாயகர் ஆலயம் பற்றி இங்கு கற்போம். யாழ்ப்பாணத்தின் வடமேற்கே தொல்புரம், சோழியாபுரம் என்னுமிரு கிராமங்கள் உள்ளன. அவற்றில் சோழியாபுரமே பிற்காலத்தில் சுழிபுரம் என மருவி உள்ளதாகக் குறிப்பிடுவர். '**தொல்லுலகும் போற்றும் சுழிபுரம்**' என்னும் கிராமத்திலே வயல் சூழ்ந்த மருதநிலத்தில் கிழக்கு நோக்கிய சந்நிதியைக் கொண்டதாக, பறாளை விநாயகர் ஆலயம் அமைந்துள்ளது.

### iii. மரபுவழிச் செய்திகள்

இவ்வாலயம் சோழர் காலத்தில் வழிபாட்டுத் தலமாக இருந்திருக்க வேண்டுமென மரபுவழிச் செய்திகள் குறிப்பிடுகின்றன. மேலும், இவ்வாலயத்தில் இந்தியாவிலிருந்து வந்த வேதாரணிய சைவக் குருமார்களால் வழிபாடுகள் நடந்ததாகவும் சோழ தேசத்திலிருந்து வந்த எழுவர் தங்கள் பரிவாரங்களுடன் பறாளை விநாயகரைத் தரிசித்துச் சென்றதாகவும் சொல்லப்படுகின்றது. யாழ்ப்பாணத்தை ஆண்ட தமிழரசர் காலத்தில் இவ்வாலயம் சிறப்பான முறையில் கட்டப்பட்டது எனக் கூறுவர்.

### iv. மூர்த்தி, தலம், தீர்த்தம்

தமிழரசர் காலத்தில் சிறப்புப் பெற்றிருந்த பறாளை விநாயகர் ஆலயத்தை, போர்த்துக்கேயர் இடிக்கத் தொடங்கினர். அவ்வேளையில் காகம் ஒன்று வந்து, இடிப்பித்த அதிகாரியின் கண்ணைக் கொத்தி ஆலயத்தை இடிக்க விடாது செய்தது. அதனால், அங்குள்ள பிள்ளையார் **கண்ணைக் கொத்திக் காக்கைப் பிள்ளையார்** எனவும் அழைக்கப்படுகிறார். அந்த அற்புத வரலாற்றினைப் பறாளை விநாயகர் பள்ளின் ஊடாக அறியமுடியும். இவ்வாலயம் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் சிறப்புக்களையும் தன்னகத்தே கொண்டது.

பறாளை விநாயகர் மீது இவ்வாலயச் சூழலில் வாழும் மக்கள் பெரும் நம்பிக்கை கொண்டு வழிபாடியற்றுகின்றனர். தாம் எக்காரியத்தைச் செய்வதற்கு முன்பும் இவ்வாலயத்தை, தரிசனம் செய்கின்றனர். மக்கள் தங்கள் தமது வயல்களிலிருந்து பெறும் அறுவடையை முதலில் விநாயகருக்கே சமர்ப்பிக்கின்றனர்.

### v. நூல்கள்

பல்வேறு சிறப்புகளைக் கொண்ட இவ்வாலயத்தின் மீது நல்லூர் சின்னத்தம்பிப் புலவர் பறாளை விநாயகர் பள்ளு என்னும் பிரபந்தமொன்றைப் பாடியுள்ளார். அந்நூல் இத்தலத்தில் வீற்றிருந்து அருள்புரியும் பறாளை விநாயகரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பாடப்பட்டதாகும். சிந்து, விருத்தம், கலிப்பா ஆகிய யாப்புகளால் அந்நூல் பாடப்பட்டுள்ளது.


இலவச விநியோகத்திற்காக

சீர்பரபு சிவனடியார் பக்தி யோடுஞ்
சிவநெறியைப் பேணுகின்ற தெய்வ ஊராம்
கார்மருவு சோலையில் குயில்கள் பாடக்
கருணைமரு கனருள்சேர் மயில்க ளாடும்
பேர்பரபு சுழிபுரத்துப் பறாளை மேவும்
பெரும்புகழ்சேர் ஈசுரவி நாய கர்மேல்
பார்பரபு ஊஞ்சலினது பண்ணிறி பாடப்
பறாளையுறை விநாயகர்தாள் பணிந்து வாழ்வாம்.

- பறாளை விநாயகர் ஊஞ்சல்

## 2. கொக்கட்டிச்சோலைத் தான்தோன்றீச்சரம்



### i. அமைவிடம்:

கிழக்கு மாகாணம் பண்டு தொட்டு சைவ சமயம் சிறப்புற்றுத் திகழ்கின்ற பிரதேசமாகும். மக்கள் சைவ சமயத்தின் மீது வைத்துள்ள பற்றும், தொன்மை வாய்ந்த பல ஆலயங்கள் அங்கு இருக்கின்றதுமே அதற்குக் காரணங்களாகும். அங்குள்ள கோயில்கள், திருப்படைக் கோயில்கள் அல்லது தேசத்துக் கோயில்கள் என்றோ வேறுபடுத்திக் கூறப்படுகின்றன. எனவே, அவ்வாறு அழைக்கப்படுகின்ற கோயில்கள் அப்பிரதேச மக்கள் அனைவருக்கும் பொதுவாக இருக்கின்ற முக்கியமான கோயில்கள் எனப் பொருள்படும்.

திருப்படைக்கோயில்களுள் ஒன்றான கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரம் மட்டக்களப்புப் பிரதேசம் முழுவதற்குமான ஒரேயொரு சிவன் கோயிலாகவும் அப்பிரதேசத்தில் தேரோட்டம் நிகழும் ஒரேயொரு கோயிலாகவும் திகழ்கின்றது. இவ் ஆலயம், இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு நகரிலிருந்து தெற்கே பதின்மூன்று கிலோமீற்றர் தொலைவிற் கொக்கட்டிச்சோலையில் அமைந்துள்ளது.

### ii. தலவரலாறு

மட்டக்களப்புப் பிரதேசத்தின் முக்கிய பிரதேசமாக மண்முனைப் பிரதேசம் விளங்குகின்றது. அக்காலத்தில் இப்பிரதேசத்தை உலகநாச்சி என்பவள் ஆட்சி செய்தாள் என்பர். அக்காலத்தில் அப்பிரதேசத்திலுள்ள காட்டில் விறகு வெட்டச் சென்ற வேடர்கள் கொக்கட்டி மரத்தை வெட்டிய போது அதிலிருந்து செந்நிறமான சாறு வடிந்தது. இதை இரத்தம் என்று எண்ணிய வேடர் தலைவன் திகடன் உலக நாச்சியிடம் சென்று சொல்ல; உலகநாச்சி தன் பரிவாரங்களுடன் குறித்த இடத்தைச் சென்று பார்த்தபோது, அந்த இடத்தில் ஒரு சிவலிங்கம் புதையுண்டு இருப்பதைக் கண்டு, அதனைப் பக்தியோடு எடுத்து, அவ்விடத்தில் சிறு கோயிலை அமைத்து அதனை வழிபாடடுக்குரிய இடமாக்கினாள். காலந்தோறும் அவ்வாலயம் புதுப்பிக்கப்பட்டு அது இன்றையநிலையை அடைந்தது. இவ்வாலயம் இயல்பாகத் தோன்றியதால், தான்தோன்றீச்சரம் என்னும் பெயரைப் பெற்றது.

இவ்வாறு சிறப்புப் பெற்றிருந்த இவ்வாலயத்தை, போர்த்துக்கீசர் அழிக்க வந்தனர். அவ்வேளையில், போர்த்துக்கீசத் தளபதி அசலிடோவுடன் ஆலயப் பூசகர் தர்க்கம் செய்தார். அவனது சவாலுக்கு விடையாக, அங்கிருந்த கல் நந்தி ஐயர் கொடுத்த புல்லைச் சாப்பிட்டு, சாணம் போட்டது. அதனைக் கண்ட தளபதி கோயிலை அழிக்காமல் சென்றான் என்று கூறப்படுகின்றது. இந்தத் தலத்தின் சிறப்பை அறிந்த குளக்கோட்டன் தான்தோன்றீசரருக்குக் கோயில் எழுப்பினான் எனவும் கூறப்படுகின்றது.

தான்தோன்றீச்சரக் கோயிலின் இறைவன் பெயர் தான்தோன்றீச்சரர். இறைவி பெயர் பார்வதி அம்மையார். தல விருட்சம் கொக்கட்டி மரம். இயற்கையாகத் தோன்றிய சிவலிங்கத்தை அவ்விடத்திலே வைத்துக் கோயில் அமைக்கப்பட்டதால் கருவறையில் உள்ள அந்த இலிங்கம் வெளியே அடியார்களுக்குத் தெரிவதில்லை. எனவே, அச்சிவலிங்கத்துக்கு மேலே உமாமகேஸ்வரர் விக்கிரகம் ஒன்று தாபிக்கப்பட்டுள்ளது.

### iii. பூசைகளும் விழாக்களும்

இக்கோயிலின் பூசைகள் செய்பவர்கள் சங்கமர் என்னும் சைவக் குருமார் ஆவர். சங்கமம் என்பது சிவனடியார்களைக் குறிக்கும். எனவே, நம் நாட்டு வழக்கப்படி அவர்களைச் சிவனடியார்களாகிய பூசகர்கள் என்று



இலவச விநியோகத்திற்காக

கூறலாம். அவர்களுடைய பூசை முறை ஆகம விதிக்கமைந்த பிற சைவக்கோயில்களில் நடைபெறுகின்ற பூசை முறையிலிருந்து சற்று வேறுபட்டது. வீரசைவப் பிரிவைச் சேர்ந்த அவர்கள் பின்பற்றும் நெறி வீராகம நெறியாகும். அது வீராகமத்தை அடிப்படையாகக் கொண்டது.

தான்தோன்றீச்சர ஆலயத்திலே தினந்தோறும் மூன்று காலப் பூசை நடைபெற்று வருகின்றது. தைப்பொங்கல், தைப்பூசம், மாசிமகம், வருடப்பிறப்பு, திருக்கார்த்திகை, திருவெம்பாவை முதலிய நாள்களில் விசேட பூசைகளும் திருவிழாக்களும் நடைபெறும். சிவராத்திரி, கந்தசஷ்டி, விநாயக சஷ்டி முதலிய விரதங்களுக்காக இங்கு பெருந் தொகையான அடியார்கள் கூடுகின்றனர்.

அக்கோயிலின் மகோற்சவம் ஆவணி மாதத்து அமாவாசைக்குப் பின் சந்திரனின் முதற் பிறை தோன்றும் நாளிற் கொடியேற்றத்தோடு ஆரம்பமாகின்றது. அதற்குப் பின்னர் பௌர்ணமிக்குப் பின் வருகின்ற முதலாவது ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் தேர்த் திருவிழாவும் அடுத்த நாளாகிய திங்கள் அன்று தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். அங்கு எல்லாமாகப் பதினைந்து நாள்களுக்குத் திருவிழாக்கள் நடைபெறுகின்றன. தேர்த் திருவிழாவே அக் கோயிலில் மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றது. அதனால், அப்பிரதேச மக்கள் மகோற்சவம் முழுவதையுந் **'தேரோட்டம்'** என்றே கூறி இன்புறுவர். சித்திரத்தேர் என்னும் பெரிய தேரிற் சிவனும் அம்மனும், பிள்ளையார் என்னுஞ் சிறிய தேரில் விநாயகரும், முருகனும் தேர்த்திருவிழாவின்போது எழுந்தருளுகின்றனர். தீர்த்த நாளன்று அதிகாலையில் வேட்டைத் திருவிழா நடைபெறும். இது ஆன்மாக்களின் ஈடேற்றத்திற்குத் தடையாயுள்ள மலங்களை இறைவன் அழிக்கும் பாவனையில் அமைகின்றது. அந்தத் திருவிழாவினை அடுத்துக் கோயிற் பரிபாலகர்களையும் தொண்டூழியக்காரரையும் திருவிழாவிற் பங்கு கொண்டோரையும் கௌரவித்து சீர்வரிசையாகக் 'குடுக்கை கூறுதல்' என்னும் நிகழ்ச்சி இடம் பெறும். அதனைப் பற்றிய விபரங்கள் மட்டக்களப்பு மான்மியத்திற் 'பங்கு கூறுங் கல்வெட்டு' திருப்படைக் களஞ்சியம் எனும் பகுதிகளில் காணலாம்.

### iv. கோயிற் பரிபாலனம்

ஏனைய சைவக் கோயில்களைப் போலன்றி அக் கோயிலின் பரிபாலனம் சற்று வேறுபட்டது. வண்ணக்கர் மூவர் கூட்டாகப் பரிபாலனத்துக்கு பொறுப்பாக இருக்கின்றனர். அவர்கள் காலிங்கமகுடி, உலகிப் போடிகுடி, படையாண்டகுடி என மூன்று குடிகளைச் சேர்ந்தவர்கள். பதவி பெறுபவர் ஆயுள் முழுவதும் அப்பதவியை வகிப்பர். அவர்களில் காலிங்கா குடியைச் சேர்ந்தவர் தலைமைப் பதவிக்கும், உலகிப்போடிக் குடியைச் சேர்ந்தவர் பொருளாளராகவும், படையாண்டகுடியைச் சேர்ந்தவர் செயலாளராகவும் நியமிக்கப்படுவார்கள். அப்பதவிகள் தாய்வழி உரிமை மூலம் பொறுப்பு மாற்றம் செய்யப்படும்.

## 3. ஒட்டுசுட்டான் தான்தோன்றீச்சரம்

### i . அமைவிடம்

இலங்கைத் தீவில் பழங்காலந் தொட்டு சிறப்புப் பெற்றுவந்த தான்தோன்றியீச்சரங்கள் இரண்டு. அவற்றுள் ஒன்று மட்டக்களப்பு பிரதேசத்தில் அமைந்துள்ள கொக்கட்டிச்சோலைத் தான்தோன்றீச்சரமாகும். மற்றையது வன்னிப் பெருநிலப் பரப்பில் முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைந்துள்ள ஒட்டுசுட்டான் தான்தோன்றீச்சரமாகும். இவ்வாலயம் மாங்குளத்திலிருந்து முல்லைத்தீவுக்குச் செல்லும் நெடுஞ்சாலையில் சுமார் இருபது கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ளது.

### ii. தல வரலாறு

யாழ்ப்பாணத்திலுள்ள இடைக்காடு என்னுமிடத்தைச் சேர்ந்த வீரபத்திரன் என்ற சைவ வேளாளர் தம் பிள்ளைகள் இருவருடன் வன்னிக்குச் சென்று குடியேறி தொழில் புரிந்து வந்தார். இவர் ஒட்டுசுட்டானில் காடுவெட்டி குரக்கன் பயிரிட்டு வந்தார். அவ்விடத்தை இன்றும் இடைக்காடு என்றே அழைப்பர். குரக்கன் கதிர்களை அறுவடை செய்த பின்னர் அதன் அடியில் உள்ள வேருடன் சேர்ந்த ஒட்டுக்களைத் தீயிட்டு எரித்தார். அப்பொழுது ஒரு குறித்த இடத்திலுள்ள ஒட்டுக்கள் எரியாது காணப்பட்டன. அவ்விடத்தை அவர் அதிசயத்துடன் பார்த்தார். சிவபெருமானின் திருவருளால் கொன்றை மரத்தின் அடியிற் சிவலிங்கத்தின் உருவில் அமைந்த கல் ஒன்று அவருக்குத் தென்பட்டது. அதனை அவர் வழிபாடு செய்யத்தொடங்கினார். அதுவே, ஒட்டு ட்டான் தான்தோன்றீச்சரர் எனக் காரணப் பெயராக அமைந்துவிட்டது.

### iii. மூர்த்திச் சிறப்பு

தானாகவே தோன்றிய இலிங்கம் என்பது சுயம்பு இலிங்கம் எனப்படும். சிற்பியால் செதுக்கப்படும் இலிங்கத்துக்கு உருத்திரபாகம், விஷ்ணுபாகம், பிரமபாகம் என மூன்று பிரிவுகளைக் கொண்ட சிவலிங்கம் வேறாகவும் ஆவுடையார்



இலவச விநியோகத்திற்காக

என்பது வேறாகவும் இருக்கும். சுயம்பு இலிங்கத்துக்கு இந்த வரையறைகள் இல்லை. ஆவுடையார் பகுதியும் இல்லை, இது இல்லாதிருத்தல் தவறு எனக் கருதிய கோயில் நிர்வாகி இந்தியாவிலிருந்த சிற்பி ஒருவரைக் கொண்டு, ஆவுடையார் பகுதியைச் செய்வித்தார். மேலும் இயற்கையாக அமைந்த இந்த இலிங்கத்தை மூடி அழகுபடுத்துவதற்குப் பொற்கவசம் ஒன்றையும் செய்வித்தார். எனினும், அவை ஒன்றும் தனக்குத் தேவையில்லை என்பதைத் தான்தோனறீச்சரர் தமது அருட்குறிப்பால் வெளிப்படுத்தினார். இதன் மூலமும் இம் மூர்த்தியின் சிறப்பு வெளிப்படுத்தப்படுகின்றது. மூடுவதற்காகக் கொண்டுவரப்பட்ட பொற்கவசம் இன்னமும் ஆலயத்தில் உண்டு. மேலும், இக்கோயிலுக்கு இயற்கையாகவும், செயற்கையாகவும் உண்டாகின்ற அனர்த்தங்களினால் பாதிக்கப்படாமல் இருப்பதும் இம் மூர்த்தியின் சிறப்பையும் அருளாற்றலையும் எடுத்துக் காட்டுகின்றது.

இக்கோயிலின் சிறப்பை அறிந்த வன்னியை ஆண்ட சிற்றரசன் ஒருவன் முதலில் இதற்குக் கோயில் கட்டுவித்தான். பல பெரிய கோயில்களைக் கட்டுவதில் ஈடுபட்ட குளக்கோட்டு மன்னனும் இக் கோயிலுக்குத் திருப்பணி செய்வித்தான். இக் கோயிலில் எழுந்தருளியிருக்கும் இறைவன் பெயர் ஒட்டுசுட்டான் தான்தோன்றியீச்சரர். எரித்த குரக்கன் ஒட்டு வேகவில்லை என்பதனால் **வேகாவனமுடையார்** என்னும் காரணப் பெயரும் இவருக்கு வழங்குகின்றது. இறைவி பெயர் **பூலோக நாயகி** இக் கோயிலின் தல விருட்சம் கொன்றைமரம் ஆகும்.

### iv. தலச் சிறப்பு

ஆரம்ப காலத்தில் இத் தலம் அடர்ந்த காட்டுப் பகுதியில் அமைந்திருந்ததால் இங்கு மக்கள் அதிகம் வாழவில்லை. இந்தத் தலத்தின் மகிமை காரணமாக மக்கள் இங்கு குடியிருக்கத் தொடங்கினர். இவ்வாறு குடியேறியவர்கட்கு வசதி செய்து கொடுக்குமுகமாக ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகளுக்கு முன் அங்கு குளம் ஒன்று கட்டுவதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இறைவன் சித்தத்தால் அக்காட்டுப் பகுதியில் முத்தையன்கட்டுக்குளம் கண்டுபிடிக்கப்பட்டது. இதனைத் திருத்தி அப்பிரதேசத்தைச் செழிப்பாக்கியமையும் அத்தலத்தின் சிறப்பாகும்.

### v. தீர்த்தச் சிறப்பு

இத் தலத்திற்கு இயற்கையாய் அமைந்த தீர்த்தக்குளம் ஒன்று உள்ளது. தீராத நோய் உள்ளவர்கள் நேர்த்திவைத்து இத் தீர்த்தக் குளத்தில் நீராடிய பின்னர் நோய் தீரும் என்பது ஐதீகம். இதன் மூலம் இந்தத் தீர்த்தத்தின் மகிமையை உணர முடிகின்றது. மேலும், இத் தீர்த்தக் குளத்தை அசுத்தப்படுத்த எண்ணுபவர்கள் இறைவனின் சீற்றத்துக்கு ஆளானதுமுண்டு. இற்றைக்கு ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் கோயிலுக்கு பூசை செய்யும் பூசகர் இருவர் தீர்த்தக் குளத்தை அசுத்தப்படுத்தினர். அதனைத் தற்செயலாகக் கண்ட பூசகர் அவர்களிடம் அசுத்தப்படுத்த வேண்டாம் எனக் கூறினார். இருந்தும் அவர்கள் அதனைப் பொருட்படுத்தவில்லை. அதனால், அவர்கள் இருவரும் குளத்திலிருந்து உயிருடன் மீளவில்லை. இதன் மூலம் தீர்த்தத்தின் மகிமையையும் மூர்த்தியின் சிறப்பையும் அறிந்து கொள்ள முடியும்.

### vi. பூசைகளும் விழாக்களும்

இவ்வாலயத்தில் நாள்தோறும் மூன்று காலப் பூசைகள் கிரமமாக நடைபெறுகின்றன. விசேட தினங்களில் அவற்றுக்குரிய பூசைகள் ஒழுங்காக நடைபெறுகின்றன. இங்கு மகோற்சவம் ஆனி மாதத்தில் வருகின்ற அமாவாசையோடு ஆரம்பித்து, பதினாறு நாட்களுக்கு நடைபெறும். பதின்மூன்றாம் நாளில் நடைபெறும் வேட்டைத் திருவிழா மிகவும் சிறப்பானது. தீராத நோய்களாற் பீடிக்கப்பட்டவர்கள் தம் நோய் தீருவதற்காக வேட்டைத் திருவிழா அன்று வேடனாக வருவதாக நேர்த்திக் கடன் செய்வார்கள். இவர்கள் வாகை மர இலை குழைகளாற் குடையும் வாகைக் குழையால் அல்லது தென்னோலையால் செய்த தொப்பியும் அணிந்து, உடல் முழுவதும் கரிபூசி வேடர்கள் போலக் கோலஞ் செய்வார்கள். தடி ஒன்றின் நுனியிற் குழை கட்டி அதனைக் கையில் வைத்துக் கொள்வார்கள். இவ் வேடர்களுக்குத் தலைவன் ஒருவன் இருப்பான். இது பரம்பரை பரம்பரையாகக் கிடைக்கின்ற ஒரு பதவியாகும். தலைவன் தேன் நிறைந்த சுரைக்குடுவை ஒன்றினை அரையிலே கட்டியிருப்பான்.

இந்தத் திருவிழாவுக்குச் சுவாமி மட்டுமே எழுந்தருளுவார். அவர் பெரிய வேடன் போல மேலே வீற்றிருக்க, வேட்டுவப் படை அணி சூழ்ந்து வர, திருவிழா பவனி வருதல் கண்கொள்ளாக் காட்சியாகும். வீதி வலம் வந்து கோயில் வாயிலை அடையும்பொழுது, அக் கோயிலின் இறைவி சுவாமியுடன் கோபித்துக் கொண்டு வாயிற் கதவைப் பூட்டிக் கொள்ளுவார். அவ்வேளையில் கோயில் மணியகாரர் அவர்களுடைய பிணக்கை விசாரித்துத் தீர்த்து வைக்கும் பாங்கில் நிகழ்ச்சி ஒன்று நடைபெறும். இவ்வாறு பிணக்குத் தீர்க்கப்பட்டுச் சுவாமி கோயிலின் உள்ளே சென்ற பின்னர், வேடுவர் ஒருவர் பின் ஒருவராக அணிவகுத்து நிற்பர். அப்போது வேட்டுவத் தலைவனின் கட்டளைக்கு அமைந்து அவர்கள் நிலத்தில் வீழ்ந்து வணங்குவர். பின்னர் அவர்கள் கோயிலை வலம் வந்து, தீர்த்தக்குளத்திற்குச் சென்று வேட்டுவ உடைகளைக் களைந்து தீர்த்தமாடுவர். இத்தகைய வேடமிடுபவர்கள்



இலவச விநியோகத்திற்காக

விரதமிருந்து இந்த நேர்த்திக்கடனைச் செய்தல் நியதி அதனால் நோய் தீரும் என்பது அவர்களது நம்பிக்கை. இதனால் வேட்டைத் திருவிழாவில் வேடுபவர்களாகப் பங்குபற்றுவோரின் தொகையும் அதிகரிக்கின்றது. மகோற்சவப் பிற்பகுதியில் பதினைந்தாம் நாள் தேர்த்திருவிழாவும் பதினாறாம் நாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். இவற்றைச் சிறப்பாக மேற்கொள்ள நெல் வயல்களினதும் தென்னந் தோட்டங்களினதும் வருவாய் பயன்படுத்தப்படுகின்றது. இவை பண்டைக்கால மன்னர்களாலும் மக்களாலும் நன்கொடையாக வழங்கப்பட்டவையாகும்.

### vii. நூல்கள்

ஒட்டுசுட்டான் தான்தோன்றீச்சரர் ஆசிரியர் விருத்தம் என்னும் நூல் கொக்குவில் கு.சு.சபாரத்தின முதலியாரால் 1883 இல் இயற்றப்பட்டது. இக் கோயிலுக்கு ஊஞ்சற் பதிகம் சுதுமலையைச் சேர்ந்த பண்டிதர் ஆ.சி. நாகலிங்கம் என்பவரால் பாடப்பட்டுள்ளது. வேட்டைத் திருவிழா அன்று இறைவனுக்கும் இறைவிக்கும் இடையலான பிணக்கை விசாரித்துத் தீர்த்து வைப்பது போன்று அமைந்த வசன கவிதை ஒன்றும் நூல் உருவில் உள்ளது. கோயில் மணியகாரரே அவர்களுடைய வழக்கை விசாரிக்கும் நடுநிலையாளர் போன்ற பாவனையில் இக் கவிதை அப்போது அவரால் படிக்கப்படும். இறைவனும், இறைவியும் நேராக ஒருவர் மீது ஒருவர் குற்றம் கூறாமல், தம் குறையை மணியகாரருக்கு முறையிடுவது போன்று இக் கவிதைகள் அமைந்துள்ளன. இது வேறு எந்தக் கோயிலிலும் இல்லாத ஒரு நிகழ்ச்சியாகும்.

## 4. நயினை நாகபூஷணி அம்மன் ஆலயம்

### i. அமைவிடம்

யாழ்ப்பாணக் குடாநாட்டின் தென்மேற்காகப் பல தீவுக் கூட்டங்கள் உள்ளன. அவற்றில் ஒன்றே நயினாதீவாகும். இது நான்கு மைல் சுற்றளவு கொண்ட சிறிய தீவாகும். இங்கு அமைந்துள்ள ஆலயம் நயினை நாகபூஷணி அம்மன் ஆலயமாகும். வரலாற்றுக் காலம் தொடக்கம் இவ்வாலயம் தமிழ்நாட்டுடன் மிகுந்த தொடர்புடையதாக இருந்து வந்துள்ளது.



இவ்வாலயத்தைப் பற்றிய வரலாற்றுச் செய்திகளை அடிப்படையாகக் கொண்டு இத் தீவகம் நாகதீவு, மணிபல்லவம், பிராமணத்தீவு போன்ற சிறப்புப் பெயர்களைப் பெற்றுள்ளது. மணிமேகலை என்னும் காவியத்தில் கூறப்படும் மணிபல்லவம் நயினாதீவாகவே இருக்க வேண்டும் என ஆராய்ச்சியாளர் கருதுகின்றது. இவ்வாலயத்தில் குடிகொண்டிருக்கும் இறைவியை நாகபூஷணி, நாகம்மாள், நாகேஸ்வரி எனப் பல நாமங்களால் அழைத்துப் போற்றுவர். பொதுவாக இந்துக்கள் புகழ்மிக்க சக்திபீடங்கள் அறுபத்து நான்கு என்பர். அவற்றினுள் நயினை நாகபூஷணி அம்மன் ஆலயமும் ஒன்றாகும்.

### ii. கர்ண பரம்பரைக் கதை

இவ்வாலயத்தின் தோற்றம் பற்றிப் பல்வேறு கர்ண பரம்பரைக் கதைகள் கூறப்படுகின்றன. அவற்றினுள் இரண்டினை இங்கு நோக்கலாம். ஈழத்தின் வடபகுதியில் விஜயன் ஈழநாட்டிற்கு வருவதற்கு முன்னரே இயக்கர், நாகர் என்னும் இரு இனத்தவர் வாழ்ந்து வந்தனர் என்பர். சிவபக்தர்களான அவர்கள் சிவனை முழுமுதற் பொருளாகக் கொண்டு வழிபடுபவர்கள். ஆயினும், அவ்வப்போது தமது வழிபாட்டின் தேவை நோக்கிப் பல ஆலயங்களைக் கட்டினர். அவற்றினுள் ஒன்றே நயினை நாகபூஷணி அம்மன் ஆலயம் ஆகும்.

முற்காலத்திலே நயினை அம்பிகையை, நாகம் ஒன்று இத்தீவகத்தின் வடக்கே உள்ள புளியந்தீவிலிருந்து நாடோறும் பூக்கள் கொண்டு வந்து, பூசித்து வந்தது. ஒருநாள் பூக்கொண்டு வரும் வழியில் கருடனொன்று அதனைக் கண்டு கொல்ல முயன்றது. நாகம் அதனை கண்டு அச்சம்கொண்டு, கடலிலிருந்த கல்லொன்றுடன் சுற்றிக் கொண்டது. கருடன் பிறிதொரு கல்லில் அமர்ந்து கொண்டு, நாகத்தைக் கொல்லத் தருணம் பார்த்துக் கொண்டிருந்தது.

அச்சமயம் மரக்கலம் ஒன்றிலே அங்கு வந்த வணிகன் ஒருவன் இக்காட்சியை கண்டு, நாகத்தின் மீது அனுதாபம் கொண்டான். அவன் கருடனிடம் நீ நாகத்தினைக் கொல்ல வேண்டாம் என வேண்டிக் கொண்டான். கருடனோ ''உனது செல்வங்கள் யாவற்றையும் என்முன் வைத்தால் நான் நாகத்தினைக் கொல்ல மாட்டேன்'' என்று கூற வணிகனும் அவ்வாறே செய்தான். உடனே கருடன் அவ்விடத்தை விட்டுப் பறந்து சென்றது.


இலவச விநியோகத்திற்காக

அன்றிரவு அவனது அறையில் பேரொளி ஒன்று தோன்றிற்று. அவ்வொளி எதுவாய் இருக்கலாம் என நெருங்கிப் பார்த்தபொழுது அது விலைமதிப்பற்ற நவரத்தினங்களில் இருந்து தெறித்த ஒளி எனத் தெரிந்து கொண்டான். இது நயினை அம்பிகையின் திருவருட் செயல் என நினைத்து அம்பிகையைப் பூசிக்கும் பொருட்டு, நாகதீபத்துக்கு வந்து, தரிசித்து, அங்கு அம்பிகைக்குப் பெரும் கோயிலைக் கட்டினான்.

### iii. மூர்த்தி, தலம், தீர்த்தம்


இவ்வாலயம் இருநிலை விமானங்கள், மண்டபங்கள் என்பவற்றைக் கொண்டுள்ளது. கிழக்கு, தெற்கு வாசல்களில் முறையே, ஒவ்வொரு இராஜகோபுரங்கள், நவக்கிரகங்கள், பரிபாலக தெய்வங்கள், சூரியன், சந்திரன் முதலான அம்சங்களையும் உள்ளடக்கிய அமைப்பை உடையது. இவ்வாலயத்தின் மூல மூர்த்தியாக ஐந்து தலை நாகமும் அம்பாளும் இணைந்த தோற்றம் கருவறையில் உள்ளது. இவ்வாலயத்தின் தலவிருட்சம் வன்னிமரமாகும். இதன் தீர்த்தக்கேணி ஆலயத்தின் மேற்கில் அமைந்துள்ள **சித்தாமிர்த புட்கரணி** தீர்த்தமாகும்.

இவ்வாலயத்தில் நான்கு கால நித்திய பூசைகள் கிரமமாக நடைபெறுகின்றன. ஆனி மாதப்பூரணையைத் தீர்த்த நாளாகக் கொண்டு மகோற்சவம் ஆரம்பிக்கப்படுகின்றது. 1966 ஆம் ஆண்டுவரை பத்து நாட்களும் நடைபெற்றன. பின்னர் பதினைந்து நாட்கள் நடைபெறுகின்றன. இம் மகோற்சவத்தில் தேர்த்திருவிழாவும் தெப்பத்திருவிழாவும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை ஆகும். நாட்டின் பல்வேறு இடங்களில் இருந்தும் மெய்யடியார்கள் இவ்விழாக்களின் பொழுது அம்பாளைத் தரிசிப்பதற்காக வருகை தருவர். ஆனிமாதப் பூரணை நிலவொளியில் அலைகடல் மத்தியில் தெப்பத்தில் எழுந்தருளி, அம்மன் காட்சி கொடுப்பது அடியார்களின் மனதை விட்டு நீங்காத அற்புதக் காட்சியாகும். இவ்வாலயத்துச் சித்திரத் தேரில் அமைந்துள்ள நுண்ணிய சிற்ப வேலைப்பாடுகள் மனதைக் கவருவனவாகும்.

### iv. நூல்கள்

இவ்வாலயத்தின் மீது மெய்யடியார்கள் பலர் பிரபந்தங்கள் பாடியுள்ளனர். வண்ணை அமரசிங்கப் புலவர் நயினை நாகபூஷணி அம்மன் ஊஞ்சல் பாடலையும், அராலி முத்துக்குமாரப் புலவர் நயினை நாகேஸ்வரியம்மை பதிகத்தையும், நயினை வரகவி, நாகமணிப்புலவர் நயினைதீவு நீரோட்ட யமக அந்தாதியையும் பாடியுள்ளனர்.

## 5. நல்லூர்க் கந்தசுவாமி ஆலயம்



### i. அமைவிடம்

நல்லூர் என்பது ஒரு சிறிய நகரம். அது ஈழநாட்டின் வடபகுதியில் யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ளது. முற்காலத்தில் இலங்கையின் வடபகுதியைத் தமிழ் மன்னர்கள் ஆட்சி புரிந்தனர். அக்காலத்தில் யாழ்ப்பாண இராச்சியத்திற்கு நல்லூர் என்னும் நகரமே இராசதானியாக இருந்தது. ஈழத்தின் வடபுலத்தில் புகழ்வாய்ந்த முருகன் ஆலயமாக விளங்குவது நல்லூர் ஆகும். நல்லூரில் நடுநாயகமாய் அமைந்த கந்தசுவாமி கோயிலைச் சூழ கிழக்கில் வெயிலுகந்த பிள்ளையார் கோயிலும், தெற்கில் கைலாசநாதர் கோயிலும், மேற்கில் வீரமாகாளியம் மன் கோயிலும், வடக்கில் சட்டநாதர் கோயிலும் அமைந்துள்ளன.

### ii. கர்ண பரம்பரைக் கதை

இவ்வாலயம் தமிழுக்கும் சைவத்திற்கும் அருந் தொண்டாற்றிய யாழ்ப்பாணத்தரசர்களது நேரடிப் பரிபாலனத்தில் இருந்து வந்ததும், அவர்களது முக்கிய வணக்கத்தலங்களில் ஒன்றாக இருந்ததும் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலாகும். இக்கோயில் ஆரியச் சக்கரவர்த்தியின் முதலமைச்சராக விளங்கிய புவனேகபாகு என்பவனால் கட்டப்பட்டதென்பர். இன்னொரு சாரார் யாழ்ப்பாண அரசைக் கைப்பற்றியாண்ட செண்பகப்பெருமாள் என்னும் புவனேகவாகுவினால் 1454 ஆம் ஆண்டு கட்டப்பட்டதென்பர். ஆனால், புவனேகவாகு என்பவரது பெயர் இவ்வாலய மகோற்சவங்களில் ஆலயக் கட்டியத்தில் கூறப்பட்டு வரும் வழக்கம் இன்றும் இருந்து வருவது குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாண அரச வீழ்ச்சியுடன் சைவ ஆலயங்கள் பல போர்த்துக்கேயரினால் இடித்தழித்துத் தரைமட்டமாக்கப்பட்டன. அப்படியாக அழிக்கப்பட்ட சைவக்கோயில்களுள் மகோன்னத நிலையிலிருந்த நல்லூர்க் கந்தசுவாமி கோயிலும் ஒன்றாகும். இந்த நல்லூர்க் கோயிலை அந்நியரால் அழிக்கமுடிந்ததே தவிர, அவனடியாரது


இலவச விநியோகத்திற்காக

அகக்கோயில் வழிபாட்டை அவர்களால் அழிக்கவோ, அசைக்கவோ முடியவில்லை. எனினும், முருகப்பெருமானுக்குப் பழைய கோவிலுக்கு அண்மையில் 1734 ஆம் ஆண்டு புதிய சிறு மடாலயம் அமைத்தனர். அக்கால ஒல்லாந்தர் ஆட்சியில் சிறாப்பராக இருந்த இரகுநாதமாப்பாண முதலியார் தனது செல்வாக்கைப்பயன்படுத்தி, இம்மடாலயத்தைக் கற்களாலும், செங்கற்களாலும் கட்டுவித்து ஓட்டினால் வேயப்பட்ட கோயில் ஆக்கினார்

**iii. மூர்த்திச் சிறப்பு**

அவ்வாலயம், இப்பொழுது மிகச் சிறந்த கோபுரமும், சுற்றுமதிலுங் கொண்ட அழகிய கோயிலாகக் காட்சியளிக்கின்றது. அவ்வாலயத்தின் மூலஸ்தானத்தில், முருகப்பெருமான் திருவுருவம் வைக்கப்படவில்லை. அதற்குப் பதிலாகக் கலியுக வரதனாகிய கந்தனின் கரத்தில் இருக்கும் அழகிய வேல் வைக்கப்பட்டுள்ளது.

**iv. பூசைகளும் விழாக்களும்**

இன்று இவ்வாலயத்தில் நாள்தோறும் ஆறுகாலப் பூசைகள் நேரம் தவறாமல் குறித்த நேரப்படி நடைபெற்று வருகின்றன. சிறப்பு விழாக்களும் இதே ஒழுங்கில் நடைபெற்று வருகின்றன. ஒவ்வொரு மாதப் பிறப்பிற்கும் திருவனந்தற் பூசைக்கு முன்னதாகப் பூந்தோட்டத் திருமஞ்சக் கிணற்றில் தீர்த்தமும் நடைபெறுவது இவ்வாலய வழக்கமாகும். இங்கு மாதந்தோறும் கார்த்திகை உற்சவம் சிறப்பாக நடைபெறுவதுடன் சஷ்டிதோறும் செல்வமுத்துக்குமாரசுவாமிக்குத் திருமஞ்சனமும் நடைபெறும்.

இவ்வாலயத்தில் ஆவணிமாத அமாவாசையன்று தீர்த்தமும், முதல் நாள் தேர்த்திருவிழாவும் நடைபெறும். இக்காலத்தில் இங்கு வரும் பக்தர்கள் கூட்டம் பல்லாயிரமாக இருக்கும். தேர்த்திருவிழாவன்று மாலை தேர்முட்டியில் சண்முகப்பெருமாளுக்குப் பச்சை சாத்துதல் நடைபெறும். அர்ச்சனையும், அப்பொலிவோடு பெருமான் ஆலயத்திற்குத் திரும்பும் கோலமும் நெஞ்சை நெகிழவைப்பதாகும். பச்சை சாத்தி எழுந்தருளுவதன் நோக்கம் எல்லாச் சீவராசிகளுக்கும் எல்லா அநுக்கிரகங்களையும் செய்யும் கருத்தாவாகிய சதாசிவமூர்த்தியாக உள்ளவர் தானே என்பதையும், வேண்டுவர் வேண்டுவன ஈயும் தன்மையும் தனக்கே உள்ளது என்பதையும் காட்டி, எல்லா நலன்களையும் பெற்று, உய்ய வாருங்கள் என்று அருள் செய்யும் குறிப்பை உணர்த்துவதாகும்.

கோயிலின் கிழக்கு வாயிலைச் சிறந்த சிற்ப வேலைப்பாடுகள் அமைந்த ஐந்தடுக்குக் கோபுரமும், அதன் இருமருங்குமுள்ள அழகிய மணிக்கோபுரங்களும் ஆலயத்துக்கு அணி செய்கின்றன. தெற்கு வீதியில் இன்னொரு கோபுரம் அழகு செய்கிறது. இதற்கு நேராகத் தெற்குப்புற வெளிவீதிக்குத் தெற்கே அழகிய தீர்த்தக்கேணியும், தண்டாயுதபாணி கோயிலும் இருக்கின்றன. இத்திருக்கேணியிற்றான் மகோற்சவ காலத் தீர்த்தம் நடைபெறுகின்றது.

இத்தலத்தில், ஈழத்தில் நடமாடும் கோயில்களாக விளங்கிய யாழ்ப்பாணச் சித்தர் பரம்பரையில் வந்த செல்லப்பாச்சுவாமி, யோகர்சுவாமி போன்ற ஞானவான்கள் வந்து தரிசனஞ் செய்து நடமாடி இருக்கின்றனர்.

## 6. மண்டூர் முருகன் ஆலயம்



இலங்கையிலுள்ள சிறப்பு வாய்ந்த முருகன் ஆலயங்களுள் மண்டூர் முருகன் ஆலயமும் ஒன்றாகும்.

**i. அமைவிடம்**

மட்டக்களப்பு நகரிலிருந்து தென்மேற்கே இருபத்தி நான்கு மைல் தொலைவில் மட்டக்களப்பு வாவிக்கு மேற்கே அமைந்துள்ளது. மண்டூர் முருகன் ஆலயம் இயற்கை எழில் கொஞ்சும் அமைதியான இடத்தில், மூன்று புறமும் மட்டக்களப்பு வாவியினால் சூழப்பட்டு, காடும் கழனியும் கொண்ட மருத நில வளம் கொழிக்கும் இயற்கைச் சூழலில் அமைந்துள்ளது.

**ii. ஆலய அமைப்பு**

மண்டூர் முருகன் ஆலயத்தில், மூலவருக்குரிய ஆலயம் தென்திசை நோக்கியதாக அமைந்துள்ளது. பிரதான ஆலயத்தினைச் சூழ, உள்வீதியில் விநாயகர், வைரவர், நாகதம்பிரான், குமாரதம்பிரான் ஆலயங்களும், வெளிவீதியில் மூலவருக்குரிய ஆலயத்தின் இருமருங்கும் வலது பக்கத்தில் வள்ளியம்மன் ஆலயமும் இடது பக்கத்தில் தெய்வானையம்மன் ஆலயமும் அமைக்கப்பட்டுள்ளன.


இலவச விநியோகத்திற்காக

### iii. ஆலய வரலாறு

இவ்வாலயம் உருவானது தொடர்பாக, சீர்பாததேவியின் வரன்முறைக் கல்வெட்டு பின்வருமாறு குறிப்பிடுகின்றது. ''சோழநாட்டு மன்னனின் மனைவி சீர்பாததேவி வீரமுனையை விட்டு, சிங்க நகருக்குச் செல்லும்போது தான் வழிபட்டு வந்த தங்க வேலை, தனது குல மக்களிடம் கையளித்துச் சென்றாள். சிறிது காலத்தின்பின் அவர்களிடையே ஏற்பட்ட முரண்பாடு காரணமாக, அவர்களில் சிந்தன் என்பவன் அவ்வேலினை எடுத்துக் கொண்டு வடக்கு நோக்கி வெகு தொலைவு சென்று, அங்கிருந்த தில்லை மரமொன்றில் பதித்து வைத்துவிட்டு, தனது உறவினர்களுடன் துறைநீலாவணையில் வாழ்ந்து வந்தான். சில நாட் கழிந்த பின், வேலினை எடுக்கும் முயற்சியில் ஈடுபட்டான். இறுதியில், தான் வைத்த இடத்தில் கொத்துப் பந்தலின் கீழ் அவ்வேல் இருப்பதைக் கண்டான். நாதனை வேடுவர் எனும் வேடர் குலத்தவர்களே அக்கொத்துப் பந்தலை அமைத்தவர்களாவர். பின்னர், சிந்தன் துறைநீலாவணை, குறுமண்வெளி ஆகிய இடங்களில் வாழ்ந்ததன் இனத்தவர்களுடன் அயற் கிராமங்களாகிய பெரிய கல்லாறு, கோட்டைக் கல்லாறு ஆகிய இடங்களில் வாழ்ந்த மக்களுடனும் சேர்ந்து, 'தில்லை மண்டூர் முருகன்' என நாமம் சூட்டி, ஆலயமாக அமைத்தான்.'' சிந்தனின் வழி வந்தவர்களே, இவ்வாலயத்தின் பெரிய கப்புகனாராகக் கடமையாற்றுகின்றார்.

### iv. மூர்த்தி, தல, தீர்த்தச் சிறப்பு

இவ்வாலயம் மூர்த்தி, தல, தீர்த்தச் சிறப்புகளைத் தன்னகத்தே கொண்டது. மண்டூர் முருகன் ஆலயக் கர்ப்பக்கிருகத்தில், தங்கவேல் வடிவமாக முருகப் பெருமான் வீற்றிருந்து அருள் புரிகின்றார். இங்கு எப்போழுதும் கர்ப்பக்கிருகம் திரைச்சீலையால் மூடப்பட்டிருக்கும். இவ்வாலயத்தை, போர்த்துக்கேயர் அழிக்க வந்த போது, குழவிகள், தேனீக்கள் அவர்களைக் கொட்டி விரட்டின. முருகனின் இத்தகைய அருட் சிறப்புகள் பலவுள.

இவ்வாலயம் மட்டக்களப்புப் பிரதேசத்தில் உள்ள திருப்படைக்கோயில்களுள் ஒன்றாகும். இவ்வாலயத்தின் கோயில் அமைப்பு, பூசை வழிபாட்டு முறைகள் ஆகிய ஒற்றுமைகளின் நிமித்தம் மண்டூர்த் தலம், சின்னக் கதிர்காமம் என அழைக்கப்படுகின்றது. அவ்வாறே, இத்தலத்தில் அருள் வழங்கும் வேலாயுதமானது, ஆரம்பத்தில் தில்லை மரத்தில் வைத்து வழிபடப்பட்டதாலும் இப்பதி **தில்லை மண்டூர்** என வழங்கப்படுகின்றது.

மண்டூர் முருகன் ஆலய சுவாமி தீர்த்தமாடுவதற்கு இத்தலத்திற்குப் பின்புறமாக சுமார் அரை மைல் தொலைவில் மூங்கிலாற்றின் சங்கமம் உள்ளது. இத்தீர்த்தம் அடியார்களின் நோய், துன்பம், கவலைகளை நீக்கும் சிறப்பினை உடையதாகும்.

### v. ஆலயத்தின் பூசை முறை

இவ்வாலயத்தில் வாய்கட்டிச் செய்யும் பூசை செய்யும் மரபு உள்ளது. இது மௌன பூசை எனப்படும். இங்கு பூசை செய்யும் பூசகர், கப்புகனார் (கற்பகனார்) என அழைக்கப்படுவார். திரை திறந்து பூசை செய்யும் வழக்கமும் இங்கு இல்லை. கப்புகனார் அமுதுக் காவினைத் தூக்கிக் கொண்டு அமைதியாக நடந்து செல்லும் காட்சி பார்ப்போர்க்குப் பரவசம் ஊட்டுவதாக இருக்கும். பூசை முடிந்த பின்னர் கப்புகனார் வெளியே வந்து திரை முன் நின்று பூசையை ஏற்றருளுமாறு சங்கு முழங்க, மணியோசை ஒலிக்க கையெடுத்துக் கும்பிட்டு வேண்டுதல் செய்யும் காட்சி நம் மனதையும் உருக்கி மெய்மறக்கச் செய்துவிடும்.

### vi. விழாக்களும் மகோற்சவங்களும்

இவ்வாலய உற்சவம் ஆடிமாதப் பூரணை கழித்த பத்தாவது நாள் தொடங்கும். தொடர்ந்து இருபது நாட்கள் திருவிழாக்கள் நடைபெற்று இருபத்தோராம் நாளான ஆவணி மாதப் பூரணையன்று தீர்த்தோற்சவம் நடைபெறும். திருவிழாக் காலத்தில் வேடர் குடியில் உள்ளோருள் ஒருவர், வாய்க்குச் சீலை கட்டி, வில்லம்பு கைக்கொண்டு, புஷ்பக விமானத்தில் முன்னே பின் முதுகு காட்டாமல், வைத்தகண் வாங்காமல், அடிமேல் அடிவைத்து, சுவாமியைக் காவல் செய்யும் பாவனையில் வீதிவலமாக நடந்து வரும் காட்சி இன்றும் நடைமுறையில் உள்ளது. வேடர்களுக்கும் இவ்வாலயத்திற்குமுள்ள தொடர்பை இந்நிகழ்ச்சி குறிப்பிடுகின்றது. திருவிழாக்காலத்தில் ஆராத்திப் பெண்கள் மயங்கிவிழுவதும், கப்புகனார் தீர்த்தம் தெளித்து, திருநீறு இட்டு மயக்கந் தெளியச் செய்வதும் தீர்த்தமாடும் வேளையில் கப்புகனார் அறிவிழப்பதும் அவரைக் கைத்தாங்கலாகக் கொண்டு வந்து, சபாமண்டபத்துள் வைத்து, மயக்கங் தெளிவிப்பதும் இவ்வாலயத்தில் இடம்பெறும் அற்புதக் காட்சிகளாகும். உற்சவ காலங்களில் அடியார்கள் தங்குவதற்காக, ஆலயத்தைச் சுற்றிவர பல மடங்கள் உள்ளன. உற்சவ காலங்களில் ஏராளமான பக்தர்கள் காவடி எடுத்தும், பெண்கள் தீச்சட்டி எடுத்தும் தத்தம் நேர்த்திக் கடன்களை நிறைவேற்றுகின்றனர்.

இத் திருத்தலத்தில் மகோற்சவத்தைத் தவிர, கந்தசஷ்டி விரதம், திருக்கார்த்திகை என்பன மிகவும் சிறப்பான முறையில் இடம் பெறுகின்றன.


இலவச விநியோகத்திற்காக

**vii. ஆலய நிருவாகம்**

மண்டூர். குருமண்வெளி, துறைநீலாவணை, பெரியகல்லாறு, கோட்டைகல்லாறு அகிய ஐந்து கிராமத்தவர்களும் தேசத்து வன்னிமையுடன் இணைந்து, இவ் ஆலயத்தின் உற்சவங்களை நடத்தி வருகின்றனர்.

**viii. நூல்கள்**

பல அற்புதங்களை நிகழ்சி. ஆடியர்களின் துயர்தீர்த்தருளும் மண்டூர் முருகன் மீது பல பெரியோர் பாடல்கள் பாடியுள்ளனர். அவற்றுள் வித்துவான் வைத்திலிங்க தேசிகர், பண்டிதர் முருகேசபிள்ளை, புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை, விநாசித்தம்பி ஆகியோர் பாடிய மண்டூர்ப் பதிகம், மண்டூர் இரட்டைமணிமாலை, மண்டூர் வடிவேலன் குறள், மண்டூர் முருகன் காவடிப்பாட்டு என்பனவும் மண்டூர்க்கவிஞர் மு. சோமசுந்தரம்பிள்ளை அவர்களது திருமண்டூர் முருகமாலை, திருமண்டூர் அந்தாதி, சைவப்புலவர் எஸ். தில்லைநாதன் அவர்கனது மண்டூர் முருகன் திருவிருத்தமாலை என்பன அவற்றுட் சிலவாகும்.

## 7. வல்லிபுர ஆழ்வார் ஆலயம்



வல்லிபுர ஆழ்வார் ஆலயம் பருத்தித்துறையிலிருந்து செம்பியன்பற்றுக்குச் செல்லும் வீதியில் ஆறு கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ளது.

**i. ஆலயவரலாறு**

இவ்வாலயத்தின் வரலாற்றினை, பின்வரும் கதைமூலம் அறிந்து கொள்ளலாம். பாரத நாட்டிலே செல்வச் செழிப்புள்ள குடும்பத்தில் பிறந்த இலவல்லி நாகதோசத்தினால் புத்திரப் பேறற்று வருந்தினாள். அவள் புத்திரப் பேறு வேண்டி, சிவனை நோக்கித் தவஞ்செய்தாள். அவளின் தவத்தில் மகிழ்ந்த, சிவன் அவள் முன் தோன்றி, ''நீ ஈழ நாட்டில் பிறப்பாய். அங்கு திருமால் உன்னை ஆட்கொண்டு குழந்தைப் பேற்றினைத் தந்தருள்வார்'' எனக் கூறி மறைந்தார்.

இலவல்லி இலங்கையின் வடபகுதியில் பருத்தித்துறைப் பகுதியில் அமைந்த வல்லிபுரம் என்னுமிடத்தில் செல்வப் பெருக்கும் கடவுள் பக்தியும் நிறைந்த குடும்பத்தில் பிறந்தாள். அவள் திருமணமாகியும் பிள்ளைப் பேறின்றி வருந்தி, திருமாலை நினைத்து வழிபட்டு வந்தாள். அக்காலப் பகுதியில் விஷ்ணு மீனாகத் தோன்றி வங்கக்கடலில் மீனவர்கட்கு பெருந்தொல்லை கொடுத்து வந்தார். இலவல்லி, இயற்கையை இரசிக்க விரும்பியவளாய், கற்கோவளத்தை அடைந்து கடலில் விளையாடினாள். பின்னர், படகிலேறி கடலில் சிறிது தூரம் சென்றாள். அவ்வேளை மீனொன்று படகிலிருந்த அவள் மடியில் பாய்வதும், மீண்டும் கடலில் குதிப்பதுமாய் விளையாடி வந்தது. இலவல்லியின் மடியில் பாய்ந்த மீன் அவளுக்கு அழகிய குழந்தையாகவும் சங்கு, சக்கரம் முதலியவற்றைக் கொண்டதாகவும் காட்சியளித்தது. அதனால் இலவல்லி, தன் பூர்வீக பலனை நினைத்து மகிழ்ச்சியுற்றாள். இறுதியில் அம்மீன் சக்கர வடிவத்தை இலவல்லிக்கு அளித்து விட்டு மறைந்தருளியது. இலவல்லி தன் முன்னே மற்சமாய், மகவுமாய்க் காட்சியளித்த மாயவனருளிய சக்கர வடிவத்தை வல்லிபுரத்துக்குக் கொண்டுவந்து ஆலயம் அமைத்து, அதனை நிறுவி வழிபட்டு வந்தாள். இலவல்லியின் ஆழ்ந்த பக்தியின் அடிப்படையில் கட்டப்பட்டமையால், இவ்வாலயத்துக்கு **வல்லிபுர ஆழ்வார் ஆலயம்** என வழங்கப்பட்டது.

**ii. மூர்த்திச் சிறப்பு**

திருமால் ஆலயங்களிலே, மூலமூர்த்தி நின்ற கோலத்திலும், கிடந்த கோலத்திலும் அமைந்திருப்பதைக் காணலாம். ஆனால், வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் மூலமூர்த்தி விஷ்ணுவின் சக்கரமான சுதர்சனமாகும். அது. பஞ்சலோகத்தாலானதாகும். சக்கரத்தை மூலஸ்தானத்தில் தாபித்து வழிபடும் ஒரேயொரு ஆலயம் வல்லிபுர ஆழ்வார் ஆலயமாகும். இவ்வாலயத்தின் வசந்த மண்டபத்திலுள்ள பஞ்சலோகத்திலான சக்கராயுதம் என்னும் சக்கரத்தாழ்வார். விழாக்காலங்களில் வீதியுலா வருவார். இவரைச் சுதர்சனமூர்த்தி எனவும் அழைப்பர்.

**iii . ஆலய அமைப்பு**

வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் நான்கு திசைகளிலும் நான்கு திருவாசல்கள் உள்ளன. கிழக்கு வாசலில் இராஜகோபுரமும் தென்மேற்கில் விநாயகர் ஆலயமும் அமைந்துள்ளன. மகா மண்டபத்திற்குத் தெற்கு நோக்கி பூமாதேவி, ஸ்ரீதேவி சமேதரராக விஷ்ணு வீற்றிருக்கின்றார். கொடிக்கம்பத்தின் வடக்கே நவக்கிரகம் உள்ளது.



இலவச விநியோகத்திற்காக

வடக்கு வாசலின் மேற்குப் புறமாக நாச்சியார் கோயிலும், தென்மேற்கிலுள்ள விநாயகருக்கு இடப்பக்கமாக நாகதம்பிரான் ஆலயமும் அமைந்துள்ளன. கிழக்கு வாசலின் வடக்குத் திசையில் மணிக் கூட்டுக்கோபுரம் காணப்படுகின்றது. இதன் வடகிழக்குப் புறமாக மேற்கு நோக்கிய வண்ணம் ஆஞ்சநேயர் வீற்றிருக்கின்றார்.

**iv . பூசை, திருவிழாக்கள்**

இவ்வாலயத்தில் தினமும் ஆறுகாலப்பூசை நடைபெறுகின்றது. புரட்டாதி மாதத்தில் வரும் அமாவாசையன்று ஆரம்பமாகும் மகோற்சவமானது, தொடர்ந்து பதினேழு நாட்களுக்கு நடைபெறும். மகோற்சவத்தின் ஒன்பதாம் நாளில் வெண்ணெய்த் திருவிழாவும், பதினோராம் நாளில் பாம்புத் திருவிழாவும், பன்னிரெண்டாம் நாளில் கம்சன் திருவிழாவும், பதின்மூன்றாம் நாளில் வேட்டைத் திருவிழாவும், பதினைந்தாம் நாளில் தேர்த்திருவிழாவும் மிகச் சிறப்பான திருவிழாக்களாகும். மகோற்சவத்தின் பதினாறாம் நாளில் தீர்த்தத் திருவிழா சமுத்திரத்தில் நடைபெறும். இதனைச் சமுத்திரத் தீர்த்தம் என்றும் **பட்டுத்தீர்த்தம்** என்றும் அழைப்பர். இறுதித் தீர்த்த விழா மகோற்சவத்தின் பதினேழாம் நாளில் நடைறெும். அன்று ஆலயத்தின் மேற்கேயுள்ள கேணியில் தீர்த்தோற்சவம் நடைபெறும். இதனைக் கேணித்தீர்த்தம் என்றழைப்பர்.

**v . நூல்கள், பிரபந்தங்கள்**

இவ்வாலயத்தின் வரலாற்றைத் தட்சிணகைலாய புராணம், தட்சிணகைலாய மான்மியம், யாழ்ப்பாண வைபவமாலை என்பவற்றில் காணலாம். இவற்றுடன் சிங்கள மொழியிலெழுந்த சந்தேச காவியங்களிலும் இவ்வாலய வரலாறு பாடப்பட்டுள்ளது. அவற்றுள் கோகுல சந்தேச (குயில் விடுதூது) குறிப்பிடத்தக்கது. சக்கரத்தாழ்வாரின் திருவருளை வேண்டிப் புலவர்கள் வல்லிபுரத் திருவந்தாதி, குருக்கட்டுத் திருவந்தாதி, கருடன் தூது, வல்லிபுரநாதர் பதிகம், சிங்கை நகர்ப்பதிகம் முதலான பிரபந்தங்களைப் பாடியுள்ளனர்.

**01. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. பறாளை விநாயகர் வேறு எப்பெயர்களால் அழைக்கப்படுகிறார்? அதற்கான காரணத்தை எழுதுக.
2. இத்தலத்தின் மீது பாடப்பட்ட பள்ளு நூல் எது? அதன் ஆசிரியரின் பெயர் யாது?
3. நயினை நாகபூஷணி அம்மனின் மறு பெயர்கள் இரண்டு தருக.
4. இலங்கையிலுள்ள முருகன் ஆலயங்கள் இரண்டின் பெயர்களைத் தருக.
5. வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் அமைவிடத்தினைக் குறிப்பிடுக.

**செயற்பாடு**

1. உங்கள் ஊரில் உள்ள விநாயகர் ஆலயம் ஒன்றுக்குச் செல்க. அவ்வாலயம் தொடர்பான பல்வேறு விடயங்களைச் சேகரித்து, காட்சிப்படுத்துக.
2. இலங்கையிலுள்ள சைவ ஆலயங்களையும், அவற்றின் அமைவிடங்களையும் எழுதி, வகுப்பறையில் காட்சிப்படுத்துக.
3. தரப்பட்ட ஆலயங்களுடன் தொடர்புடைய கதைகளை எழுதி, வகுப்பறையில் காட்சிப்படுத்துக.

**பாடச்சுருக்கம்**

- '**தொல்லுலகும் போற்றும் சுழிபுரம்**' என்னும் கிராமத்திலே வயல் சூழ்ந்த மருதநிலத்தில் கிழக்கு நோக்கிய சந்நிதியைக் கொண்டதாக, பறாளை விநாயகர் ஆலயம் அமைந்துள்ளது.
- இலங்கையில் தான்தோன்றீச்சரங்கள் இரண்டு உள்ளன. அவை மட்டக்களப்புக் கொக்கட்டிச்சோலையிலும் ஒட்டுசுட்டானிலும் அமைந்துள்ளன.
- வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் மூலமூர்த்தியாக சுதர்சனமுர்த்தி உள்ளார்.
- இலங்கையிலுள்ள சிறப்பு வாய்ந்த முருகன் ஆலயங்களில் நல்லூர்க் கந்தசாமி ஆலயம், மண்டூர் முருகன் ஆலயம் என்பன அடங்கும்.
- நயினை நாகபூஷணி அம்மன் ஆலயம் சக்தி ஆலயங்களில் ஒன்றாகும்.


இலவச விநியோகத்திற்காக